**அனுப்புநர்**

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள்
உதவி இயக்குநர்கள்.

**ந.க.எண்.001911/பி1/2022** **நாள் : 12.05.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6–மே 2022 பத்தாம் வகுப்பு, மேல்நிலை முதலாமாண்டு மற்றும் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு – மாற்றுத்திறனாளி பள்ளி மற்றும் தனித்தேர்வர்கள்– அறிவியல் செய்முறைத் தேர்வு விலக்கு மற்றும் மொழிப்பாட விலக்கு சலுகைகளை Google Sheet–ல் பதிவேற்றம் செய்தல் – தொடர்பாக.

**பார்வை :**

1. அரசாணை (நிலை) எண்.23, பள்ளிக் கல்வி (வி1)த்துறை, நாள்.11.02.2013.
2. அரசாணை (நிலை) எண்.54, பள்ளிக் கல்வி (ஜிஇ1)த்துறை, நாள்.29.02.2016.
3. அரசாணை (நிலை) எண்.62, பள்ளிக் கல்வி (அ.தே)த்துறை, நாள்.25.03.2022.

******

நடைபெற்று கொண்டிருக்கும் மே 2022 பத்தாம் வகுப்பு, மேல்நிலை முதலாமாண்டு மற்றும் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வில், மாற்றுத்திறனாளி பள்ளி மற்றும் தனித்தேர்வர்களுக்கு அந்தந்த மாவட்டக்கல்வி மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் வழியாக சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களின் பரிந்துரையுடன் பார்வை 1, 2 மற்றும் 3–ல் காணும் அரசாணையின் அடிப்படையிலும் மற்றும் உரிய மருத்துவச் சான்றிதழின் அடிப்படையிலும் தகுதியுள்ள மாணாக்கர்களுக்கு இயக்குநரின் செயல்முறை ஆணையின் வாயிலாக சலுகைகள் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

தற்போது அறிவியல் பாட செய்முறைத் தேர்வு விலக்கு மற்றும் மொழிப்பாட தேர்வு விலக்கு சலுகைகளுக்கு பின்னேற்பாணை பெறப்படவுள்ள மாற்றுத்திறனாளி பள்ளி மற்றும் தனித்தேர்வர்கள் விவரங்களையும், ஏற்கனவே மேற்குறிப்பிட்டுள்ள சலுகைகள் அளிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளி பள்ளி மற்றும் தனித்தேர்வர்கள் விவரங்களையும் கீழ்க்காணும் பட்டியல் 1 மற்றும் 2–ல் குறிப்பிட்டுள்ள தேதிகளில் Google Sheet–ல் பதிவேற்றம் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்படி விவரங்கள் அனைத்தையும் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய Google Sheet ஆனது உரிய தேதிகளில் சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களின் மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும். இதில் காலதாமதத்தினை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**பட்டியல் –1**

**இடைநிலை (SSLC)**

| **பாடங்கள்** | **தேர்வு நாள்** | **Google Sheet மின்னஞ்சல் மூலமாக அனுப்பவுள்ள நாள்** | **Google Sheet- ல் பதிவேற்றம் செய்து முடிக்க வேண்டிய நாள்** |
|---|---|---|---|
| மொழிப்பாடம் விலக்கு – பகுதி I | 06.05.2022 | 13.05.2022 | 17.05.2022 |
| ஆங்கிலப்பாடம் விலக்கு – பகுதி II | 18.05.2022 | 20.05.2022 | 23.05.2022 |
| அறிவியல் செய்முறை தேர்வு விலக்கு | N/A | 13.05.2022 | 17.05.2022 |

**பட்டியல்–2**

**மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு**

| **மேல்நிலை முதலாமாண்டு/ இரண்டாமாண்டு** | **பாடங்கள்** | **தேர்வு நாள்** | **Google Sheet மின்னஞ்சல் மூலமாக அனுப்பவுள்ள நாள்** | **Google Sheet- ல் பதிவேற்றம் செய்து முடிக்க வேண்டிய நாள்** |
|---|---|---|---|---|
| இரண்டாமாண்டு | மொழிப்பாடம் விலக்கு – பகுதி I | **05.05.2022** | 14.05.2022 | 18.05.2022 |
| | ஆங்கிலப்பாடம் விலக்கு – பகுதி II | **09.05.2022** | 14.05.2022 | 18.05.2022 |
| முதலாமாண்டு | மொழிப்பாடம் விலக்கு – பகுதி I | **10.05.2022** | 14.05.2022 | 19.05.2022 |
| | ஆங்கிலப்பாடம் விலக்கு – பகுதி II | **12.05.2022** | 14.05.2022 | 19.05.2022 |

**ஒம்/–**
**இயக்குநர்**

**நகல் :** அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும்
மாவட்டக் கல்வி அலுவலர்கள் –தகவலுக்காக